# வளம்

## இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையத்தின் செய்திமடல்

CIKS

காலாண்டுச் செய்திமடல்

ஜூலை 2011 மலர் 7 இதழ் 2

மேலும் தகவல்களுக்கு **www.ciks.org** என்ற இணையத்தளத்தைப் பார்க்கவும்.



## தற்சார்பு முக்கோணம்

### பல்வகைமைப் பாதுகாப்பு, பூச்சிக்கொல்லிகளின் அளவைக் குறைத்தல் மற்றும் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் - திட்ட விவரம்

இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP-GEF) உதவியுடன் இந்தத் திட்டத்தை தமிழ்நாட்டிலுள்ள காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் செயல்படுத்தியது. இந்தத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சில முக்கிய பணிகள் பின்வருமாறு,

- அரிசி அப்பளம், வடாம், புட்டு கலவை போன்ற ஏழு வகையான மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் தயாரிப்பு தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- 58 சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு குறித்து பயிற்சிகள் நடத்தப்பட்டன.
- நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள இரண்டு பெண்கள் சுய உதவிக் குழுக்கள் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பு மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ளன.
- மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்புக் கூடம் 225 சதுர அடியில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கட்டப்பட்டுள்ளது.
- நாகப்பட்டினம் மாவட்டக் கடலோர கிராமங்களில் 25க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் ரகங்கள் பயிரிடப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றன.
- திண்டுக்கல் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் 11 வகையான 5 பாரம்பரியக் காய்கறி ரகங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.
- பாரம்பரிய நெல் ரகங்கள் சாகுபடி குறித்த விவசாயிகளின் அனுபவங்கள் மற்றும் விவரங்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.
- திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு பூச்சிக்கொல்லிகளின் அளவைக் குறைத்தல், இயற்கைவழி வேளாண்மை மற்றும் அதை சார்ந்த தொழில்நுட்பங்கள் குறித்து பல தொடர் பயிற்சிகள் நடத்தப்பட்டன.



*தாவரக் கரைசல் தயாரிப்பு குறித்த செயல்முறை விளக்கப் பயிற்சி*

- பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் விவசாயிகள் மற்றும் பிரதிநிதிகளுக்கு இயற்கைவழி வேளாண்மை குறித்த திறன் வளர்ப்பு பயிற்சிகள் நடத்தப்பட்டன.
- "நெல் பல்வகைமை" மற்றும் "இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள்" என்ற தலைப்புகளில் விவர நாட்காட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன.

## இயற்கைவழி உணவுத் திருவிழா

பாரம்பரிய மற்றும் இயற்கைவழி உணவின் முக்கியத்துவம் மற்றும் சத்துக்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, இயற்கைவழி உணவுத் திருவிழா திண்டுக்கல் மாவட்டத்தில் மே 26ஆம் தேதியன்று நடத்தப்பட்டது. வங்கி மேலாளர்கள், வேளாண், தோட்டக்கலை மற்றும் வேளாண் பொறியியல் துறை அலுவலர்கள் முக்கிய விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இதில் சுமார் 350 விவசாயிகள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர். இந்த விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு பாரம்பரிய அரிசி ரகங்கள், தானியங்கள் மற்றும் பருப்பு வகைகளைக் கொண்டு செய்யப்பட்ட உணவு வகைகள் பரிமாற ப்பட்டன. மேலும், இந்த விழாவில், நமது மையத்தின் வழிகாட்டுதலின் கீழ் செயல்படும் 11 விவசாயிகள் குழுக்கள் நபார்டு (NABARD) வங்கியால் உழவர் மன்றங்களாக அங்கீகரிக்கப்பட்டன.





# செயல் திட்டங்கள் - ஒரு பார்வை

**இயற்கைவழி வேளாண்மை மூலம் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம்**

இந்தத் திட்டம் மும்பையிலுள்ள ஜாம்செட்ஜி டாடா டிரஸ்டின் (JTT) உதவியுடன் காஞ்சிபுரம், ராமநாதபுரம், திண்டுக்கல் மற்றும் நாகப் பட்டினம் மாவட்டங்களில் மே 2009 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நெல் ரகங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சணப்பை மற்றும் காய்கறிகளில் சான்று மற்றும் உண்மைநிலை விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடுபொருள் உதவி மற்றும் பயிர் கடன் திட்டங்களின் கீழ் 749.94 ஏக்கருக்கு இடுபொருட்களும் பயிர் கடனும் வழங்கப் பட்டுள்ளன. இந்த உதவித் திட்டங்களின் கீழ், நெல் ரகங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி, மிளகாய், வாழை மற்றும் மலர் வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. நான்கு மாவட்டங்களிலும் இயற்கைவழி மாதிரி விளக்க வயல்கள் உருவாக்கப்பட்டு பல்வேறு இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சமுதாயக் காய்கறித் தோட்டங்கள் மற்றும் மாதிரி வீட்டுக் காய்கறித் தோட்டங்களில் காய்கறிகள் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சமுதாய மண்புழு உரத் தயாரிப்புக் கூடங்களில் மண்புழு உர உற்பத்தி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள 27 சிறுதொழில்களும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன. திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர்களுக்கு 15 குறுகிய காலப் பயிற்சிகளும், 11 பயிற்சியாளர் பயிலரங்குகளும் நடத்தப்பட்டன. கோயமுத்தூரில் நடைபெற்ற வேளாண் கண்காட்சி 2011ல் கலந்து கொண்டோம். இந்தத் திட்டத்தின் இரண்டாம் ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு டாடா அறக்கட்டளைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

**தற்சார்பு வேளாண்மையை வலுப்படுத்துவதன் மூலம் கிராமப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் - மானாவாரி சாகுபடிக்கான திட்டம்**

இந்தத் திட்டம் ஃபோர்டு மற்றும் ஹீவாஸ் நிறுவனங்களின் உதவியுடன் திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள ஜவ்வாது மலை மற்றும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள செந்துறை பகுதியிலுள்ள 15 கிராமங்களில் 1341.59 ஏக்கரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாதாந்திர சங்கக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழுள்ள விவசாயிகளின் வயல்களில் தமிழ்நாடு இயற்கைவழி சான்று துறையினால் புற ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்தின் பயனீட்டாளர்கள் இயற்கைவழி வீட்டுக் காய்கறித் தோட்டப் பராமரிப்பு மற்றும் மண்புழு உரத் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். திட்டத்தின் பயனீட்டாளர்களுக்கு 7 குறுகிய காலப் பயிற்சிகளும், 3 பயிற்சியாளர் பயிலரங்குகளும் நடத்தப்பட்டன. இதில் இயற்கைவழி வேளாண்மைத் தொழில்நுட்பங்கள், கோழி வளர்ப்பு மற்றும் கால்நடைப் பராமரிப்பு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், திட்டத்தின் பயனீட்டாளர்கள் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள நமது மையத்தின் திட்டப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்தத் திட்டத்தின் கீழ், திண்டுக்கல் மாவட்டத்தில் இயற்கைவழி உணவுத் திருவிழா மே மாதத்தில் நடத்தப்பட்டது.

**ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்தும் திட்டம்**

நமது மையம் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள ஆலங்காடு கிராமத்தில் இயற்கைவழி வேளாண்மையை அறிமுகப்படுத்தும் திட்டத்தை ஜனவரி 2009 முதல் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், “கால்நடைகளின் எண்ணிக்கை மற்றும் பராமரிப்பு”, “ஆலங்காடு கிராமத்தில் உள்ள மர இனங்கள்” மற்றும் “இயற்கைவழி நெல் மற்றும் உளுந்து சாகுபடிக்கான செலவுகள்” என்ற தலைப்புகளில் விவரச் சேகரிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. பூஞ்சோலை மர நாற்றாங்காலில் 17 வகையான மரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டும் பராமரிக்கப்பட்டும் வருகின்றன. சுமார் 480 மரக் கன்றுகள் ஆலங்காடு மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் நடப்பட்டன. ஆலங்காடு கிராமத்தில் உருவாக்கப்பட்டுள்ள சமுதாய வீட்டுக் காய்கறித் தோட்டம் பலவகையான காய்கறிகள் மற்றும் கீரை வகைகளுடன் பராமரிக்கப்பட்டு வருகிறது. சமுதாய மண்புழு உரத் தயாரிப்புக் கூடத்தில் 11.36 டன் மண்புழு உரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. ஆலங்காடு கிராமப் பெண்கள் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கைவினைப் பொருட்கள் மற்றும் காகிதப் பைகள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் திருநெல்வேலியிலுள்ள காஸ்ட் (CAST) நிறுவனத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு கற்றாழை நாரைப் பயன்படுத்தி கைவினைப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் நெய்தல் போன்றவற்றை கற்றறிந்தனர். மே 27ஆம் மற்றும் 28ஆம் தேதிகளில், கூடைத் தயாரிப்புக் குறித்து பெண் பயனீட்டாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

**இயற்கைவழி வேளாண்மை மூலம் வாழ்வாதாரத்தை உருவாக்குதல்**

இந்தத் திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்தின் சீர்காழி தாலுக்காவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் செயல்பாடுகள் ஆதமங்கலம், பாகசாலை மற்றும் இளையமதுக்கூடம் கிராமங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழுள்ள விவசாயிகள் 17 பேர் 20.97 ஏக்கரில் இயற்கைவழி நெல், பருத்தி, நிலக்கடலை மற்றும் காய்கறிகள் சாகுபடியில் ஈடுபட்டு உள்ளனர். ஏப்ரல் 2ஆம் தேதியன்று, கழிவுப் பொருட்கள் மேலாண்மை மற்றும் மண்வள மேம்பாடு குறித்து பாகசாலை கிராமப் பயனீட்டாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. திருந்திய நெல் சாகுபடி (SRI) தொழில்நுட்பங்கள் குறித்து ஏப்ரல் 29ஆம் தேதியன்று, இளையமதுக்கூடம் கிராமத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியை ஆடுதுறையிலுள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி மையத்தின் டாக்டர் ராஜேந்திரன் அவர்கள் நடத்தினார். இதை தவிர பயனீட்டாளர்களுக்கு தாவரக் கரைசல்கள் தயாரிப்பு, இயற்கைவழி வேளாண்மையின் அடிப்படைகள் மற்றும் திருந்திய நெல் சாகுபடி முறைகள் குறித்து பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தத் திட்டத்தின் கீழ், அகணி கிராமத்தில் உள்ள தாவரக் கரைசல் தயாரிப்பகத்துக்கு அரவை இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. திட்டத்தின் கீழுள்ள பயனீட்டாளர் கிராமங்களில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை குறித்த விவரச் சேகரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயிகள் மன்றங்களின் மூலம் தொழில்நுட்பப் பரிமாற்றம், கடன் ஆலோசனை மற்றும் விற்பனை பரிந்துரை செய்யும் திட்டம்**

இந்தத் திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்தின் சீர்காழி தாலுக்காவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 22 விவசாயிகள் மன்றங்களைச் சேர்ந்த 36 விவசாயிகள் விவசாயப் பயிற்சியாளர்களாகப்

# நிகழ்வுகள் - ஒரு அலசல்

பயிற்றுவிக்கப்பட தேர்வுச் செய்யப் பட்டுள்ளனர். இந்த விவசாயிகளின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. மே 6ஆம் தேதியன்று, கறவை மாடுகள் பராமரிப்பு குறித்து, திருவாரூரிலுள்ள விவசாயிகள் பயிற்சி மையத்தில் பயிற்சியளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சியை மையத்தின் தலைவர் மற்றும் பேராசிரியர் டாக்டர் சங்கரன் அவர்கள் நடத்தினார். இதில் 26 பயனீட்டாளர்கள் கலந்து கொண்டனர். ஜுன் 9, 20 மற்றும் 22ஆம் தேதிகளில், கால்நடைகள் பராமரிப்பு மற்றும் கடன் ஆலோசனை குறித்த பயிற்சிகள் நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சிகளை திருவாரூரிலுள்ள விவசாயிகள் பயிற்சி மையத்தின் டாக்டர் ஏ. சங்கரன், டாக்டர் கதிர்செல்வம் மற்றும் தஞ்சாவூரிலுள்ள கிராமப்புற சுய வேலை வாய்ப்பு பயிற்சி மையத்தின் திரு. ரவிச்சந்திரன் ஆகியோர் நடத்தினர்.

### தற்சார்பு வேளாண்மையை ஊக்குவிப்பதற்கான திட்டம்

இந்தத் திட்டம் வேளாண்மை மற்றும் கிராமப்புற மேம்பாட்டிற்கான தேசிய வங்கியின் (NABARD) உதவியுடன் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சீர்காழி தாலுக்காவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட இயற்கைவழி நெல் ரகங்களை (64.4 டன்) பக்குவப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சீர்காழி மற்றும் மயிலாடுதுறை தாலுக்காவில் இயற்கைவழி அரிசி குறித்து நுகர்வோரின் கருத்துக்கள் குறிப்பிட்ட படிவங்களில் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ், சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்கம் மற்றும் நான்கு பெண்கள் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கோயமுத்தூரில் ஜுன் 27 - 30ஆம் தேதிகளில் நடைபெற்ற வேளாண் கண்காட்சி 2011ல் கலந்து கொண்டனர். இதில் பல்வேறு பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களைக் காட்சிக்கு வைத்தனர்.

### சுக்கன்கொல்லையில் நடந்த பணிகள்

சுக்கன்கொல்லையில் உள்ள நமது ஆய்வுப் பண்ணையில் உளுந்து, கம்பு, தீவனச் சோளம், கேழ்வரகு, சணப்பை, மிளகாய் போன்றவை சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மாதிரி காய்கறித் தோட்டத்தில் முள்ளங்கி, வெண்டை, கொத்தவரை, காராமணி போன்ற காய்கறிகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. சென்ற பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்த *குள்ளக்கார்* நெல் ரகம், நிலக்கடலை, சணப்பை மற்றும் பச்சைப்பயறு அறுவடை செய்யப்பட்டுவிட்டன. பண்ணையில் *அசோலா* வளர்ப்பு, மக்கு உரம் மற்றும் மண்புழு உரத் தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பண்ணையிலுள்ள விதை வங்கியில் பாதுகாக்கப்பட்டு வரும் 82 பாரம்பரிய நெல் ரகங்களின் முளைப்புத் திறன் பரிசோதிக்கப்பட்டது.

### காம்பாஸ் ஆசிய உறுப்பினர்கள் கூட்டம்

காம்பாஸ் ஆசிய உறுப்பினர்கள் கூட்டம் இலங்கையிலுள்ள கண்டியில் ஏப்ரல் 4 - 7ஆம் தேதிகளில் நடத்தப்பட்டது. நமது மையத்தின் சார்பாக ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும், கே. விஜயலட்சுமி அவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். இதில் இந்தியா மற்றும் இலங்கையிலுள்ள காம்பாஸ் திட்டக் குழுக்கள் கலந்து கொண்டு திட்டத்தின் நிறைவு கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட களப்பணிகள் மற்றும் ஆசிய ஒருங்கிணைப்புப் பணிகள் குறித்து விவாதித்தனர். மேலும், வருங்காலச் செயல் பாடுகளுக்கான திட்டங்கள் குறித்தும் விவாதித்தனர். காம்பாஸ் திட்டத்தின் இந்திய மற்றும் இலங்கை உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து இதர நிறுவனங்களின் உதவியுடன் தென் ஆசிய சமுதாயத்திற்கு உதவும் வகையில் கலாச்சாரமும் பல்லுயிர் பல்வகைமையும் - ஒருங்கிணைந்த சமுதாய வழிகாட்டியை உருவாக்கத் திட்டமிட்டுள்ளனர்.

### நைனிடாலில் நடைபெற்ற கூட்டம்

என்.பி.எம்.ஐ. (Non-Pesticidal Management Initiative) நிறுவனத்தின் வருடாந்திர திட்ட ஆலோசனைக் கூட்டம் உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள நைனிடாலில் ஏப்ரல் 7 - 10ஆம் தேதிகளில் நடைபெற்றது. இதில் சிராக் (CHIRAG), சமூஹா (Samuha), சேட்னா ஆர்கானிக்ஸ் (Chetna Organics), வாசன் (WASSAN) போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் 20க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். நமது மையத்தின் சார்பாக கே. சுப்ரமணியன் மற்றும் ஆர். மணிகண்டன் ஆகியோர் இதில் கலந்து கொண்டு தமிழ்நாட்டில் சிஐகேஎஸ்-ன் செயல்பாடுகள் மற்றும் இயற்கைவழி நெல் ரகங்களைச் சந்தைப்படுத்துவதில் சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்கத்தின் அனுபவங்கள் என்ற தலைப்புகளில் உரையாற்றினர். இந்தக் கூட்டத்தில் சேஃப் ஹார்வெஸ்ட் கம்பெனியின் (Safe Harvest Company) வருடாந்திர விளைப்பொருட்கள் தேவை மற்றும் என்.பி.எம். சான்றிதழ் குறித்து விவாதிக்கப்பட்டது. இதை தொடர்ந்து, இந்தக் கூட்டத்தில் பங்கு பெற்றவர்கள் நைனிடாலில் உள்ள சிராக் தொண்டு நிறுவனத்தின் இயற்கைவழி பண்ணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

### தில்லியில் நடைப்பெற்ற கூட்டம்

மானாவாரி விவசாய மேம்பாட்டு கூட்டமைப்பின் (RRA Network) கூட்டம் புது தில்லியில் மே 25ஆம் மற்றும் 26ஆம் தேதிகளில் நடைபெற்றது. இந்தக் கூட்டமைப்பின் மையக் குழு உறுப்பினரான ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். இந்தக் கூட்டமைப்பின் பணிகளுக்கு தேவைப்படும் மனித வள ஆதாரங்கள் குறித்தும் அதற்கான ஒருங்கிணைந்த தேர்ந்தெடுப்பு முறை குறித்தும் இதில் திட்டமிடப்பட்டது. இதைத் தொடர்ந்து குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் புதிய திட்டங்களைத் துவக்குவது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

### தேசிய கருத்தரங்கு

மானாவாரி விவசாய மேம்பாட்டிற்கான சர்வதேச கூட்டமைப்பு "மானாவாரி பகுதிகளில் மண் வளத்தை மேம்படுத்துதல்" என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கை போபாலில் உள்ள இந்திய மண் அறிவியல் மையத்தில் (Indian Institution of Soil Science) ஜுன் 28 - 29ஆம் தேதிகளில் நடத்தியது. இந்தக் கருத்தரங்கில் போபாலில் உள்ள இந்திய மண் அறிவியல் மையம், ஐதராபாத்தில் உள்ள ஐ.சி.ஆர்.ஐ.எஸ்.ஏ.டி. (ICRISAT), பெங்களூருவிலுள்ள கிரீன் பீஸ் (Green Peace), ஆந்திராவிலுள்ள சேட்னா ஆர்கானிக்ஸ் (Chetna Organics) மற்றும் வாசன் (WASSAN) மற்றும் பெங்களூருவிலுள்ள ஏ.எம்.ஈ பௌண்டேஷன் (AME Foundation) ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த 25க்கும் மேற்பட்ட நபர்கள் கலந்து கொண்டனர். நமது மையத்தின் சார்பாக, சுபாஷிணி ஸ்ரீதர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு "சமுதாய மண்புழு உர உற்பத்தி - இயற்கைவழி கழிவுகளை மறுசுழற்சி செய்தல் - அல்லிவிளாகம் கிராமத்தின் அனுபவம்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

### வேளாண் கண்காட்சி 2011

மே 27 - 30ஆம் தேதிகளில், வேளாண் மற்றும் தோட்டக்கலை கண்காட்சி 2011 கோயமுத்தூரில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியில் வேளாண் இடுபொருட்கள், உபகரணங்கள், விளைப்பொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்டப் பொருட்கள் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன. இந்தக் கண்காட்சியில் இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் கலந்து கொண்டு புத்தகங்கள், வீடியோ படங்கள், பாரம்பரிய நெல் ரகங்கள், இயற்கைவழி விளைப்பொருட்கள் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்டப் பொருட்களைப் பார்வைக்கு வைத்து விற்பனை செய்தது.

### சீர்காழி பயணம்

ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும், கே. விஜயலட்சுமி அவர்களும் மையத்தின் நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைமுறையில் உள்ள திட்டப் பணிகளைப் பார்வையிடுவதற்காக ஜுன் 16 மற்றும் 17ஆம் தேதிகளில் சீர்காழி களப்பணி அலுவலகத்திற்கு சென்று இருந்தனர். இந்தப் பயணத்தின்போது ஆலங்காடு கிராமத்தில் நடைமுறையில் உள்ள பணிகளைப் பார்வையிட்டனர். மேலும், சீர்காழி இயற்கை விவசாயிகள் சங்கப் பொறுப்பாளர்களுடன் கலந்துரையாடினர். ஆ.வே. பாலசுப்பிரமணியன் அவர்கள் நாகப்பட்டின மாவட்ட நபார்டு வங்கியின் துணை பொது மேலாளர் திரு. வேணுகோபால் அவர்களை சந்தித்து கலந்துரையாடினார்.

# புத்தகங்களும் வீடியோ படங்களும்

## பாரம்பரிய முறைகளைப் பாதுகாக்கும் வேளாண்மை குறித்த சர்வதேச மாநாட்டின் நடைமுறை குறிப்பேடு




இந்தப் புத்தகம் பாரம்பரிய முறைகளைப் பாதுகாக்கும் வேளாண்மை என்ற தலைப்பில் செப்டெம்பர் 18 – 20ஆம் தேதிகளில் உதயப்பூரில் நடைபெற்ற சர்வதேச மாநாட்டில் விவரிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பாகும். இதில் பாரம்பரிய அறிவு மற்றும் தொழில்நுட்பங்கள், வேளாண் பல்வகைமைப் பாதுகாப்பு மற்றும் பாரம்பரிய செயல் முறைகள், பாரம்பரியக் கால்நடைப் பராமரிப்பு, கலாச்சாரமும் பல்லுயிர் பல்வகைமையும் – ஒருங்கிணைந்த சமுதாய வழிகாட்டி, பழங்குடி சமுதாயத்தினர் பின்பற்றும் பாரம்பரிய வேளாண் செயல்முறைகள், தண்ணீர் மேலாண்மை, ஜீவாமிர்தம் மற்றும் குணப்பஜலாவின் குணாதிசயங்கள் போன்ற பல தொழில்நுட்பக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

**விலை : ரூ. 350/–**

இந்தப் புத்தகத்தைப் பெற விரும்புவோர் புத்தகத்தின் விலையுடன் 30% தபால் செலவையும் சேர்த்து சென்னையில் மாற்றத்தக்க பணவிடை (M.O.) அல்லது வரைவோலையை (D.D.) இந்தியப் பாரம்பரிய அறிவியல் மையம் (Centre for Indian Knowledge Systems) என்ற பெயரில் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பவும்.

# வருகையாளர் பதிவேடு

- *ஏப்ரல் 15ஆம் தேதியன்று, கோலம் சுற்றுலா நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ரஞ்சித் ஹென்றி அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *ஏப்ரல் 16ஆம் தேதியன்று, ஆலோசகர்கள் திரு. அஸ்வின் மற்றும் செல்வி. ரதிகலா ஆகியோர் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*
- *ஏப்ரல் 21ஆம் தேதியன்று, ஃபுட் பார்ன் (Food Barn) நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் (CEO) திரு. என்.எஸ். கிருஷ்ணகுமார் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *ஏப்ரல் 27ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள மகரிஷி வித்யா மந்திர் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் 33 பேர் நமது சுக்கன்கொல்லை ஆராய்ச்சிப் பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *மே 5ஆம் தேதியன்று, சென்னை லயோலா கல்லூரியில் நடைபெற்ற கோடைக் காலப் பயிற்சி வகுப்பில் பங்கு பெற்ற மாணவர்கள் 23 பேர் திரு. சுபாஷ் அவர்களின் தலைமையில் சுக்கன்கொல்லை ஆராய்ச்சிப் பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *மே 14ஆம் தேதியன்று, சென்னையிலுள்ள பரம்பரை (Parampara) நிறுவனத்திலிருந்து டாக்டர் வி. விஸ்வநாதன் அவர்களும், திரு. கே. ஸ்ரீநிவாசன் அவர்களும் சுக்கன்கொல்லை ஆராய்ச்சிப் பண்ணைக்கு வந்திருந்தனர்.*
- *மே 30ஆம் தேதியன்று, தேசிய திறன் மேம்பாட்டு மன்றத்தின் (National Council for Skill Development) முன்னாள் உறுப்பினர் திரு. யுவராஜ் கலாபா அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*
- *ஜூன் 9ஆம் தேதியன்று, மலேசியாவிலுள்ள நேச்சுரல் ஜஸ்டிஸ் (Natural Justice) நிறுவனத்திலிருந்து திரு. ஹாரி ஜோனாஸ் மற்றும் செல்வி ஹோலி ஷ்ரம் ஆகியோர் நமது மையத்திற்கு வந்திருந்தனர்.*
- *ஜூன் 10ஆம் தேதியன்று, காந்திக் கிராம கிராமியப் பல்கலைக் கழகத்தின் வேளாண் மற்றும் கால்நடைப் பராமரிப்பு துறையின் தலைவர் டாக்டர் டி.டி. ரங்கநாதன் அவர்கள் நமது மையத்திற்கு வந்திருந்தார்.*

ஆசிரியர் குழு : இரா. அபர்ணா தூயவதி & டாக்டர் கே. விஜயலட்சுமி

வடிவமைப்பு : ரா. ஆனந்த் & எஸ். ரமேஷ்

நூல்–அஞ்சல்

பெறுநர்

CIKS

30, காந்திமண்டபம் சாலை, கோட்டூர்புரம், சென்னை – 600 085.

தொலைபேசி : 91-044-24471087, 24475862

மின்னஞ்சல் : **info@ciks.org** இணையத்தளம் : **www.ciks.org**